சாதாரணக் கூட்டம்

ஈரோடு மாவட்டம் பவானி நகராட்சியில் 2021-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31.12.2021-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை: திருமதி. பி.தாமரை
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
பவானி நகராட்சி

**பொருள் எண்:1**

ஆணையாளர் அவர்களின் டிசம்பர் 2021ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**பொருள் எண்:2**

பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி, திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services Private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை கொண்டு நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்தப் பணிக்காலம் 31.10.2021-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 31.10.2021-ஆம் தேதியுடன் முடிகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 01.11.2021-ஆம் தேதி முதல் 30.11.2021-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2016, நாள்: 29.11.2019ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ₹.612/- என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

மேலும், தற்போது கோவிட்-19 வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட அரசால் தளர்வுகளுடன் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் (COVID – 19 Preventive Measures on War footing Manner) மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது. டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்த காலத்தை 01.11.2021 முதல் 30.11.2021ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ₹.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காண் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்:2255/2021/எச்1

பொருள் எண்: 3

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (**Tamil Nadu Information Technology, Electronic Service Delivery Rules 2016**) துணை விதி (1) விதி 5 ன் மூலம் பவானி நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி மின்னணு சேவை விநியோக (**Electronic Service Delivery System**)அமைப்பின் கீழ் **https://tnurbanepay.tn.gov.in/** என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர்இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | |
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for NOC/ Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | |
| | | ii | குடிநீர்இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>NOC for Water Connection (Industrial) | |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Movie Shooting Payment | |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | |
| | | v | தொழிற்சாலை பயன்பாடுபாதாளசாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று<br>NOC for UGD Connection for Industrial | |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்னேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம்<br>Layout Approval Payment | |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement of Work | |
| | | vii | கட்டிடம் இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | |
| | | viii | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமகட்டணம்<br>Planning Permission with Building License Payment | |
| | | ix | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (12 மீட்டருக்குகீழ்)<br>Planning Permission with Building License (Below12 mts) | |
| | | x | கட்டிடஅனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்கு கீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 Sq ft) | |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professionals/Developers | |
| | | xii | தொழில் வல்லுநர்/டெவலப்பர்கள் சான்றிதழ் பதிவு | |

| | | | |
|---|---|---|---|
| | | | Registration of Professional/Developers Certificate |
| | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal for Building Plan Request |
| | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal for Building Plan Payment |
| | | xv | தொழில் வல்லுநர்கள் /டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal/Registration of Professional/Developer |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமப்பதிவு தேடல்<br>Trade Registration Search |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் தேடல்<br>Trade Renewal Search |
| 6 | சொத்து வரி<br>Property Tax | i | வரிவிதிப்பு முழுவிவரம்<br>View Assessment History |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment |
| 7 | தொழில் வரி<br>Profession Tax | i | புதிய தொழில் வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கையின சமர்ப்பிப்பு<br>Return Submission |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஈரோடு மாவட்ட அரசிதழில் வெளியிட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 1900/C1/2021)**

**பொருள் எண்: 4**

பவானி நகராட்சியில் TURIP 2020-21 திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண் 9025/2019/இ3, நாள்: 16/07/2020ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கீழ்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் வார்டு எண் 6, மீனாட்சி கல்யாண மண்டபம் சாலை, வார்டு எண் 11, தேவபுரம், ஐயப்பன் கோவில் சாலை மற்றும் வார்டு எண் 19, கல்தொழிலாளர் 3வது வீதி, ஆகிய சாலைகளின் மட்டமானது அந்த தெருக்களில் உள்ள வீடுகளின் தரை மட்டமும் ஒரே மட்ட அளவில் உள்ளதனால், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடித ந.க.எண் 3011/2020/இ3, நாள்: 06.01.2021இல் பழைய தார்சாலைகளை மேம்பாட்டுப்பணிகள் செய்ய வேண்டியது ஏற்பட்டால், பழைய தார்சாலையின் மட்டத்தை உயர்த்தி அமைக்காமல் அந்த சாலையை சுரண்டி பள்ளமாக எடுத்து அதன் பின்தான் பழைய சாலை மட்டத்தில் தான் சாலை அமைக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி சாலை அமைக்க வேண்டுமானால் மூல மதிப்பீட்டில் அதற்குண்டான வழிவகைகள் இல்லை எனவே, மேற்கண்ட மூன்று சாலைகளையும், பணி மேறகொள்ளமுடியவில்லை. எனவே, தற்போது ரூ.40.03 இலட்சத்திற்கு முடிக்கப்பட்டுள்ள பணிகளுக்கு மட்டும் பணி முடிவுற்று அறிக்கை தயார் செய்து தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl.no | Name of Work | Estimate amount (Rs. In lakhs) | Value of work done (Rs. in Lakhs) |
|---|---|---|---|
| 1 | Restoration of BT road at Sokkaramman kadu, Anna nagar, Gurunathan Street, Meenatchi Kalyanamandapam road, Thiruvalluvar nagar, Somasundarpuram,Devapuram and Kalthozhilalar 3 rd street in Ward No:1,3,5,6,7,8,11 and 19 | 100.00 | 40.03 |

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 608/2020/E1**

**பொருள் எண்: 5**

பவானி நகராட்சியின் பொறியியல் பிரிவில் திட்டப்பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் ஆன்லைனில் பதிவேற்றம் செய்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட வேண்டி உள்ளது. ஆன்லைனில் பதிவேற்றம் செய்ய DIGITAL SIGNATURE CERTIFICAT(DSC) CARD CLASS III COMBO 2 எண்ணிக்கைகளுக்கு DIGITAL IDENTITY, திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ₹.9000 வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை DIGITAL IDENTITY நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மன்ற அனுமதியினை எதிர்நோக்கி DIGITAL IDENTITY, TIRUCHIRAPALLI நிறுவனத்திற்கு ₹.9000/ வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 6**

பவானி நகராட்சி, பொறியாளர் பிரிவில் திட்டப்பணிகளின் ஒப்பந்தப்புள்ளிகளை Online-இல் பதிவேற்றம் செய்து, ஒப்பந்தப்புள்ளிகளை பெறப்படவேண்டியுள்ளது. Online-இல் பதிவேற்றம் செய்ய Digital Signature Certificate(DSC) card class III தேவைப்படுகிறது. தற்போது உதவிப் பொறியாளர் அவர்களுக்கு இல்லாததால் புதியதாக 1 எண் வாங்க வேண்டியுள்ளது இதற்கு ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.4,500/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 7**

பவானி நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா நோய் தடுப்பு பணிகள், டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள், கொசு ஒழிப்பு பணிகள் ஆகிய பணிகளை பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், சுழற்சி முறையில் நாள்தோறும் நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வீடு வீடாக சோதனை செய்திடும் (Door Breeding Checker) நோய் தடுப்பு பணிகளுக்கு சுயஉதவிகுழு மூலம் (EPF, ESI யில் பதிவு பெற்ற) விலைப்புள்ளி ஒப்புதல் அடிப்படையில் ஜனவரி 2022 மாதத்திற்கு மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் 2021-2022 ஊதிய விலைவிகிதபடி நியமித்து பணி மேற்க்கொள்ளவும், அதற்கான செலவினம் கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் விலை விகிதம் 2021-2022<br>( ஒரு மணி நேரத்திற்கு ₹.72.00 ) | 1 Hour | 72.00 |
| 2) | ( 5 மணி நேரத்திற்கு 5 X ₹.72.00 ) | 5 Hour | 360.00 |

ஜனவரி 2022 மாதத்திற்கு மேற்கண்ட கணக்கீட்டின் படி, 30 பணியாளர்களை உள்ளூர் சுய உதவி குழுக்கள் (EPF, ESI யில் பதிவு பெற்ற) மூலம் விலைப்புள்ளி அடிப்படையில் நியமித்து பணிகள் செயல்படுத்துவதற்கும், அதற்காகும் உத்தேச செலவினம் 30 நபர்கள் x 26 நாட்களுக்கு x ₹.360.00 நாள் ஒன்றுக்கு 5 மணிநேர கணக்கீட்டின் படி மொத்த ஊதியத்தொகை ₹.2.81 இலட்சத்திற்கும், மேற்கண்ட பணிகளுக்கு சுய உதவி குழுக்கள் (EPF, ESI யில் பதிவு பெற்ற) மூலம் விலைப்புள்ளிகள் பெற்று பணி மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 863/2021/எச்1

**பொருள் எண்: 8**

பவானி நகராட்சியின் நவீன ஆடுவதை செய்யும் கூடத்திற்கு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையினரால் வழங்கப்பட்ட உரிமத்தின் காலம் 31.12.2021 ஆம் தேதியுடன் முடிவடைந்து உள்ளதால், தொடர்ந்து செயல்பட ஏதுவாக மேற்படி துறைக்கு Online மூலம் ரூ.2500/- புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்து தனது சொந்த பொறுப்பில் துப்புரவு ஆய்வாளர் செலுத்தி உரிமம் புதுப்பித்து பெற்று சமர்பித்து உள்ளார். எனவே, துப்புரவு ஆய்வாளார் திரு.எம்.செல்வராஜ் செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.2500/- திரும்ப வழங்ககோரி விண்ணப்பம் அளித்துள்ளதை ஏற்று தொகை ரூ.2500/- துப்புரவு ஆய்வாளருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 437/2016/எச்1

**பொருள்எண்:9**

இந்நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மானியம் 2021-1022 திட்டத்தின் கீழ் Tied Grant – ல் ரூ.62.00 இலட்சமும் Untied Grant ல் ரூ. 42.00 இலட்சமும் மொத்தம் ரூ.104.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்:21191/2021/அம்ரூட்-2, நாள். 13.11.2021இல் கடிதம் வரப்பெற்றுள்ளது. அக்கடிதத்தின்படி Tied Grant –ல் 50% சதவீதம் குடிநீர் பணிகளும் 50% சதவீதம் திடக்கழிவு மேலாண்மை பணிகளும் தேர்வு செய்து சமர்பிக்கப்பட்டதில் கீழ்காணும் 9 பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்: 31117/2021/அம்ரூட்-2 நாள்: 06.12.2021இல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரிசை எண்; 1இல் காணும் பணிக்கு நகராட்சி மண்டல செயற்பொறியாளர், திருப்பூர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற்று பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| S No. | Ward No. | Name of the Work | Estimate Cost in Lakhs |
|---|---|---|---|
| | | **A.works under Tied component** | |
| 1 | 4 | Supply, Delivery and Erection of Vertical Turbine motor Pump set in Head Water works at Bhavani Municipality. | 22.00 |
| 2 | 4 | Construction of store room at head water works | 8.50 |
| 3 | 4 | Manufacture, Supply, Erection and Commissioning of Hydraulic Bale Press Machine -1No at Compost yard MCC in Bhavani Municipality | 3.60 |
| 4 | 4 | Construction of Public health store room at Municipal Office first Floor | 9.50 |
| 5 | | Supply, Delivery of Mini Tractor Pto Operated Shredder cum Pulverizer Machine with tyre | 2.60 |
| 6 | | Supply, Delivery of High Pressure Cleaner | 0.50 |
| 7 | 4 | Construction of BOV and LCV Vehicle Shed at head works | 10.00 |
| 8 | 4 | Supply and installation of Mechanical Sieving machine at Compost yard MCC | 1.00 |
| 9 | 4 | Supply and installation of Plastic shreading machine at Compost yard MCC | 4.00 |
| | | **Total** | **61.70** |

**அலுவலக குறிப்பு:**

1) நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற நிர்வாக அனுமதியினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2) தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்மைக்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1323/2021/இ1)

**பொருள் எண்:10**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 15 வரையிலான பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களில் ஏற்படும் பழுதகைளை உடனுக்குடன் சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டியுள்ளதால் அவ்வாறு ஏற்படும் பழுதுகளை மராமத்து பணிகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00 இலட்சம் ஆகும். இப்பணியினை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1 மன்றம் அனுமதிக்கலாம்

2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.071-5/2021/இ1)

**பொருள்எண்:11**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரையிலான பகுதிகளில் அமைந்துள்ள பொது குடிநீர் குழாய்களில் ஏற்படும் குடிநீர் கசிவுகள் மற்றும் சிதிலமடைந்த குழாய்கள் மாற்றியமைக்கும் பணிகள் சரி செய்யவும், பொது குடிநீர் குழாய்களுக்கு PILLAR அமைக்கவும், மேலும் HDPE TANK மூலம் உப்பு நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவற்றில் TANK உடைப்பு, TANK மேடை ஆகியவற்றை பழுது நீக்கம் செய்யப்படவும், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5,00,000/- ஆகும். இப்பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.071-4/2021/இ1)

**பொருள்எண்:12**

பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.13 பசுவேஸ்வரர் வீதி நகராட்சி துவக்கப்பள்ளியில் கிழக்கு பக்கம் உள்ள கட்டிடத்தில் மராமத்து பணி செய்ய ரூ.3.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கல்வி நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.071-3/2021/இ1)

**பொருள்எண்:13**

பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10 பழனிபுரம் நகராட்சி வடக்கு துவக்கப்பள்ளயில் வடக்கு பார்த்த கட்டிடம் மற்றும் மேற்கு பார்த்த கட்டிடம் மேற்கூரை பழுதடைந்து உள்ளதால் இந்த இரு கட்டிடங்களை மராமத்து பணி செய்ய ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கல்வி நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.071-2/2021/இ1)

**பொருள்எண்:14**

பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.10 பழனிபுரம் நகராட்சி வடக்கு துவக்கப்பள்ளயில் தெற்கு பார்த்த கட்டிடம் மற்றும் கிழக்கு பார்த்த கட்டிட ஆகிய இரு கட்டிடத்தில் மராமத்து பணி செய்ய ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. கல்வி நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.071-1/2021/இ1)

**பொருள்எண்:15**

பவானி நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.16 முதல் 27 வரை உள்ள பகுதிகளில் உள்ள கழிப்பிடங்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி உள்ளதால் அவ்வாறு ஏற்படும் பழுதுகளை மராமத்து பணி செய்ய ரூ.6.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்

**பொருள்எண்:16**

பவானி நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்: 26 பழைய பேருந்து நிலையத்தில் உள்ள பொது கழிப்பிடத்தில் மராமத்து பணி செய்ய வேண்டியுள்ளதால் கழிப்பிடத்தில் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ3.00 இலட்சம் ஆகும். இப்பணியை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.071-7/2021/இ1)

**பொருள்எண்:17**

பவானி நகராட்சி அனைது நகர பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யக்சகூடிய தலைமை நீரேற்று நிலையத்தில் Gas Chlorination Plant அமைக்கப்பட்டு Chlorination செய்யப்பட்டு பொது மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, 2022-23ஆம் நிதியாண்டிற்கு Chlorination பணிக்கு அவ்வப்பொழுது தேவைப்படும் சமயங்களில் Gas Chlorination சிலிண்டர்கள் வாங்கி பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதி 2022-23 ஆம் ஆண்டு நிதியிலிருந்து பணி மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.071-8/2021/இ1)

**பொருள்எண்:18**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரை உள்ள அனைத்து பகுதிகளிலும் பொது மக்களுக்கு தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தி வரும் மினி பவர் பம்புகள், பவர் பம்புகள் மற்றும் பொது கழிப்பிடங்களில் தண்ணீர் வசதிக்காக பயன்படுத்தும் ஏர்கம்ப்ரசர்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்ய 2022-23ஆம் நிதி ஆண்டிற்கு, ஆண்டு பராமரிப்பு பணி செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.071-9/2021/இ1)

**பொருள்எண்:19**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 27 வரையிலான பகுதிகளில் நீருந்து குழாய்கள் மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மூலம் தினசரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி, குழாய்களில் அவ்வபோது உடைப்புகள் ஏற்படுகிறது. அதனை சரி செய்ய குழி எடுக்கப்பட்டு உடைப்பை சரி செய்யும் பொழுது குடிநீர் குழாயில் இருந்து வந்து கொண்டே இருக்கும் ஆதலால் உடைப்பை சரி செய்வதில் காலதாமதம் ஏற்படுவதுடன் மிகவும் சிரமத்தில் தள்ளப்படுகிறார்கள். எனவே, உடைப்பு ஏற்பட்ட குழாயில் இருந்து வரும் நீரை இரைக்க 3HP DEWATERING PUMP மற்றும் HOSE உடன் வாங்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.60,000/- ஆகும். இப்பணியினை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.071-10/2021/இ1)

**பொருள்எண்:20**

இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளிலும் 1052 எண்ணிக்கை LED விளக்குகளும், 147 எண்ணிக்கை சோடியம் ஆவி விளக்குகளும், 7 எண்ணிக்கை உயர் மின் கோபுர

விளக்குகளும், 6 எண்ணிக்கை CFL விளக்குகளும் மொத்தம் 1212 எண்ணிக்கை தெரு மின் விளக்குகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த தெரு விளக்குகளை எரிய வைக்க மின்சார வாரியத்தின் மூலம் இணைப்பு பெறப்பட்டுள்ளது. இணைப்பில உள்ள மீட்டர் பெட்டிகள் துரு பிடித்தும், பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் தொடும் உயரித்தில் பாதுகாப்பு இல்லாமல் உள்ளது. பொதுமக்களுக்கு உயிர்க்கு ஆபத்து தரக்கூடிய நிலையில் உள்ள அனைத்து மீட்டர் பெட்டிகளையும் மாற்றி புதியதாக பொருத்த ரூ.9.00 இலட்சத்திற்கு இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை நிறைவேற்ற மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.071-11/2021/இ1)

**பொருள்எண்:21**

பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்ய பயன்பாட்டில் உள்ள 5 எண்ணிக்கை மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு Automatic Water Level Indicator பொருத்த ரூ.5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. நகரில் சீரான குடிநீர் தினசரி வழங்க ஏதுவாக இப்பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.071-12/2021/இ1)

**பொருள்எண்:22**

பவானி நகராட்சி – பொது சுகாதாரம் – இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 54 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது 63 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டு அப்பணியாளர்களை கொண்டு நல்லமுறையில் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்போது ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் ஒப்பந்தப் பணிக்காலம் எதிர்வரும் 314.12.2021-ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களின் கடிதத்தின் வாயிலாக 31.12.2021-ஆம் தேதியுடன் முடிகின்ற ஒப்பந்த பணியினை மேலும் 01.01.2022-ஆம் தேதி முதல் 31.01.2022-ஆம் தேதி வரையிலான காலத்திற்கு இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2016, நாள்: 29.11.2019ல் குறிப்பிட்டுள்ள அதே நிபந்தனைகள் மற்றும் Terms and Conditions-க்கு உட்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.612/- என்னும் விலைவிகிதத்தில் தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து சம்மதக் கடிதம் இந்நகராட்சிக்கு வழங்கியுள்ளார்.

மேலும், தற்போது கோவிட்-19 வைரஸ் நோயினை கட்டுப்படுத்திட அரசால் தளர்வுகளுடன் நோய் தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் (COVID – 19 Presentive Measures on War Putting Manner) மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகரின் சுகாதாரப்பணிகள் தங்கு தடையின்றி நடைபெற வேண்டியது அத்தியாவசியமாகிறது.

டெங்கு காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் நகரில் பரவாமல் தடுக்க சுகாதாரப் பணிகளை திறம்பட மேற்கொண்டு நகரின் சுகாதாரத்தினை நல்ல முறையில் பராமரிக்க வேண்டியது நகராட்சியின் முக்கிய பொறுப்பாகும் என்பதால் தற்போதுள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு மேற்படி சுகாதார பணிக்கான ஒப்பந்த காலத்தை 01.01.2022 முதல் 31.01.2022 ஆம் தேதி வரை நீட்டிப்பு செய்து தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காண் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2255/2015/எச்1)